# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1798/62 - 2013 පෙබරවාරි මස 22 වැනි සිකුරාදා - 2013.02.22

*1798/62 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 21/78* (IX).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், கம்பெனி இலக்கம் ஜீ ஏ 2232 என்பதைக் கொண்டதுமான இலங்கை சர்வதேச பௌத்த கலைக்கழகம் (SIBA) தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, பின்வருமாறு நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டதும் அதன் சுருக்கெழுத்துக்கள் நிரல் II இல் காணப்படுகின்றதுமான பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் அளிப்புக்கு இட்டுச் செல்கின்ற உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக ஒரு பட்டமளிக்கும் நிறுவகமாக மேற்கூறப்பட்ட கலைக்கழகத்தை இக்கட்டளைமூலம் அங்கீகரிக்கின்றேன் :-

| *நிரல் I*<br>பட்ட நிகழ்ச்சித்திட்டம் | *நிரல் II*<br>பட்டங்களுக்கான சுருக்கெழுத்துக்கள் |
|---|---|
| பௌத்த தலைமைத்துவத்திலான கலைமாணி விசேட பட்டம் | BA (BL) விசேட SIBA |

**அட்டவணை**

1. பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான குறைந்தபட்சத் தகைமை, கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் மூன்று சித்திகளாகவிருத்தல் வேண்டும்.

2. இலங்கை மாணவர்களின் விடயத்தில், குறைந்தபட்சத் தகைமைக்கு மேலதிகமாக, பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் சாதாரணப் பொதுப் பாடத்தில் ஆகக்குறைந்தது முப்பது சதவீதத்தையேனும் (30%) பெற்றிருத்தல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

3. வெளிநாட்டு மாணவர்களின் விடயத்தில், அவர்களின் கல்வித் தகைமைகள் இலங்கைக் கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சைக்குச் சமமானவை அல்லது ஒரு மாணிப் பட்டத்துக்கு இட்டுச் செல்கின்ற பட்டதாரி மாணவருக்கான கற்கை நெறியொன்றிற்கான போதிய தகைமைகளாகவுள்ளதென அவர்களின் சொந்த நாட்டிலுள்ள சேர்த்துக்கொள்ளும் அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளத்தக்கவை என அத்தாட்சிப்படுத்தி, சம்பந்தப்பட்ட பரீட்சைச் சபையிடமிருந்து பெற்ற ஒரு கடிதத்தைத் தமது விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புமாறு விண்ணப்பகாரர்கள் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

4. இலங்கை சர்வதேச பௌத்த கலைக்கழகத்தின் (SIBA) நிர்வாகப் பணியாட்டொகுதியினரை ஆட்சேர்ப்பதற்கான திட்டங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மனித வளக் கொள்கைக்கிணங்க அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும்.

5. இக்கட்டளையின் ஏற்பாடுகள், இக்கட்டளை வலுவுக்கு வருகின்ற திகதியன்று அல்லது அதற்குப்பின்னர் இலங்கை சர்வதேச பௌத்த கலைக்கழகத்துக்கு (SIBA) சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு நாடுகின்ற எல்லா மாணவர்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர்கல்வி அமைச்சர்.

உயர்கல்வி அமைச்சு,
18, வோட் இடம்,
கொழும்பு 07 ,
2013, பெப்புருவரி 18.

3- 512